இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 10-12-2024

# வீறு கொள்ளும் விவசாயிகள்

தலைநகர் டெல்லியை நோக்கி மீண்டும் வீறு கொள்ளும் போராட்டங்களைத் தொடங்கி இருக்கிறார்கள் விவசாயிகள்!

பஞ்சாப் - அரியானா எல்லையில் உள்ள ஷம்பு பகுதியில் இருந்து தலைநகர் டெல்லியை நோக்கி நேற்றைய முன்தினம் விவசாயிகள் மாபெரும் பேரணியாகப் புறப்பட்டார்கள். இரும்புத் தடுப்புகள் அமைத்து அவர்களைத் தடுத்தது காவல் துறை. மீறிச் சென்றவர்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

**வேளாண் பயிர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டபூர்வமான உறுதிமொழி தேவை என்பதற்காக விவசாயிகள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். கடந்த பிப்ரவரி 13 ஆம் தேதி முதல் பஞ்சாப் - அரியானா எல்லையில் அமர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். இது 300 ஆவது நாளை எட்டி உள்ளது.**

இதில் 101 பேர் கடந்த 6 ஆம் தேதியன்று டெல்லியை நோக்கி பேரணியாகச் சென்றார்கள். அவர்கள் மீது காவல் துறை கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியது. ஒரு நாள் போராட்டத்தை தள்ளி வைத்த விவசாயிகள், மீண்டும் நேற்றைய தினம் டெல்லியை நோக்கிச் சென்றார்கள். மீண்டும் அவர்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டன. தண்ணீர் பீய்ச்சி அடிக்கப்பட்டது. கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்படுவதால் தங்கள் முகங்களை துணியாலும், ஈர சாக்குப் பைகளாலும் மூடிக் கொண்டு விவசாயிகள் ஊர்வலமாக வந்தார்கள்.

காவல் துறையிடம் 101 பேரின் பெயர்களைக் கொடுத்துள்ளோம், அவர்கள்தான் ஊர்வலமாக வருகிறார்கள் என்று விவசாயிகள் சொல்லி இருக்கிறார்கள். இல்லை, பட்டியலில் பெயர் இல்லாதவர்களும் வருகிறார்கள் என்று சொல்கிறது காவல் துறை. இதுதான் பிரச்சினையை அதிகப்படுத்தி வருகிறது.

300 நாட்களாகப் போராடும் விவசாயிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தவில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசு. இப்போராட்டத்தை நடத்தும் சம்யுக்தா கிசான் மோர்ச்சா என்ற அமைப்பு அரசியல் கட்சிகள் சார்பற்றது. அரசியல் கட்சிகள் எதுவும் தங்களது போராட்டத்தில் கலந்து கொள்ளத் தேவையில்லை என்றும் இந்த அமைப்பு சொல்லி இருக்கிறது. 50க்கும் மேற்பட்ட சங்கங்கள் இப்போராட்டத்தைச் சேர்ந்து நடத்துகின்றன. பங்கெடுக்காத விவசாயச் சங்கங்களும் வெளியில் இருந்து ஆதரவைத் தருகின்றன.

ஆனாலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை."இதன் மூலமாக பா.ஜ.க.வின் உண்மை முகம் வெளிச்சத்துக்கு வந்துவிட்டது" என்று இந்த அமைப்பின் தலைவர் சார்வான் சிங் பந்தர் பேட்டி அளித்துள்ளார். போராடும் விவசாயிகளை அழைத்துப் பேசாத ஒன்றிய பா.ஜ.க. அரசு, பா.ஜ.க. ஆதரவு சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து மனு வாங்கிக் கொண்டுள்ளது.

மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்து விவசாயிகளின் அனைத்து உரிமைகளையும் பறிக்கத் திட்டமிட்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இதற்கு எதிராக 2020-21 ஆம் ஆண்டுகளில் வீறுகொண்ட போராட்டத்தை தலைநகர் டெல்லியில் நடத்தினார்கள் விவசாயிகள். ஒன்றரை ஆண்டுகள் இந்த போராட்டம் தொடர்ந்தது. இறுதியாக அந்த மூன்று சட்டங்களையும் திரும்பப் பெற்றது பா.ஜ.க. அரசு. அப்போது சில வாக்குறுதிகளை அந்த அரசு கொடுத்தது. ஆனால் அதனை செய்து தரவில்லை. எனவேதான் இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மீண்டும் போராட்டம் தொடங்கினார்கள் விவசாயிகள்.

**"13 மாதங்களுக்கு முன்பு மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறுவதாக மோடி அரசு அறிவித்தது. குறைந்தபட்ச ஆதார விலைக்கான சட்டம் இயற்றப்படும் என்று சொன்னது. அதை இதுவரை செய்யவில்லை. போராடிய விவசாயிகள் மீது போடப்பட்ட குற்றவழக்குகளை திரும்பப் பெறுவோம் என்று சொன்னது. ஆனால் திரும்பப் பெறவில்லை. போராட்டத்தின் போது மரணம் அடைந்த, கொல்லப்பட்ட விவசாயிகளது குடும்பங்களுக்கு இழப்பீடு தரப்படும் என்று சொன்னார்கள். இதுவரை செய்யவில்லை. எம்.எஸ்.சுவாமிநாதன் கொடுத்த அறிக்கை அமல்படுத்தப்படும் என்று வாக்குறுதி அளித்தது. அதற்கான எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. 13 மாதங்களாக எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. அதனால்தான் போராடுகிறோம்" என்று விவசாயிகள் சொல்கிறார்கள்.**

கடந்த முறை விவசாயிகள் போராடிய போது அதனைத் தடுக்க முள்வேலி கம்பிகள் போடப்பட்டது. முள் ஆணி தடுப்புகள் வைக்கப்பட்டன. டயர் கில்லர்கள் வைக்கப்பட்டன. ட்ரோன்கள் மூலமாக கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டன. இணையச் சேவைகள் முடக்கப்பட்டது. துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இவை போன்றவை மீண்டும் திரும்பாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைகளில்தான் இருக்கிறது.

**குறைந்தபட்ச ஆதார விலையை சரியான முறையில் தீர்மானித்து அதை சட்டமாக்குவது, விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்வது, வயதான விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவது, போராடிய விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெறுவது, போராட்டத்தில் உயிர் தியாகம் செய்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவது, உலக வர்த்தக அமைப்பின் கட்டுப்பாடுகளில் இருந்து வெளியேறுவது ஆகிய கோரிக்கைகளை இப்போது விவசாயிகள் வைத்துள்ளார்கள். அவர்களோடு ஒன்றிய பா.ஜ.க. அரசு நேரடியாக பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும்.**

**கண்ணீர் புகைக் குண்டுகளை நம்புவதை விட விவசாயிகளின் கண்ணீர் துடைக்கும் காரியங்களை பா.ஜ.க. அரசு செய்ய வேண்டும்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.12.2024) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் சந்தித்து, ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிட விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத ஊதியமான 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைச்செல்வன், எம்.பாபு, எஸ்.எஸ்.பாலாஜி, ஜெ. முகம்மது ஷா நவாஸ் ஆகியோர் உள்ளனர்.

## அதானி விவகாரம்! 'இந்தியா' கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, டிச. 10 –

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரின் 3வது வாரத்தில் முதல் நாளில் அலுவல்கள் தொடங்கி நடைபெற்று வருகிறது. மக்களவை நேற்று காலை தொடங்கிய உடனே அதானி விவகாரம், சம்பல் பகுதிக்கு செல்ல முயன்ற ராகுல்காந்தியை தடுத்து நிறுத்தியது உள்ளிட்ட பிரச்சினைகளை எதிர்கட்சிகள் எழுப்ப முயன்றனர். இதனால் மக்களவை தொடங்கிய சிறிது நேரத்திலேயே நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கபட்டது.

இதனைத் தொடர்ந்து நடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி கட்சிகளைச் சார்ந்த எம்.பி.க்கள் கவுதம் அதானியின் நிதி முறைகேடுகளை முன்வைத்து கண்டன ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். நூதன முறையில், மோடி மற்றும் அதானியுடைய உருவம் பொறித்த முகமூடிகளை இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் அணிந்த படி கண்டன ஆர்பாட்டத்தில் பங்கேற்றனர்.

மக்களவை எதிர்கட்சி தலைவர் ராகுல் கந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, தி.மு.க. எம்.பிக்கள் டி.ஆர், பாலு, கனிமொழி உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்கள் அனைவரும் இந்த ஆர்பாட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

## பிறந்த நாள்: போராட்டக் குணத்துக்கும் அர்ப்பணிப்புக்கும் சான்றாக

# திருமதி சோனியா காந்தியின் வாழ்க்கைப் பயணம் திகழ்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, டிச. 10 -**

**காங்கிரஸ் கட்சியின் மூத்தத் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களின் பிறந்த நாள் நேற்று (டிசம்பர் 9 ) அதையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.**

**அதில், போராட்டக் குணத்துக்கும் அர்ப்பணிப்புக்கும் சான்றாக அவரது வாழ்க்கைப் பயணம் திகழ்கிறது என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு : -

காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்.

பெரும் சவால்களை எதிர்கொண்டு முன்னேறி, மேன்மைப் பண்பு கொண்ட தலைவராகத் தொடர்வது என அவரது வாழ்க்கைப் பயணம் அவரது போராட்டக்குணத்துக்கும் அர்ப்பணிப்புக்கும் சான்றாகத் திகழ்கிறது.



வெற்றியும் அமைதியும் நிறைந்து - நீண்டகாலம் அவர் நல்ல உடல்நலத்துடன் திகழ விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# சட்டமன்ற நாயகர் - கலைஞர் நூற்றாண்டு சிறப்பு மலர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்! பேரவைத் தலைவர் மு.அப்பாவு முன்னிலையில்!

சென்னை, டிச. 10 -

"சட்டமன்ற நாயகர்-கலைஞர்" நூற்றாண்டு விழா சிறப்பு மலரை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு, "நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகைகளை வழங்கினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் முன்னிலையில் நேற்று (9.12.2024) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி பேரவைத் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவால் தயாரிக்கப்பட்ட "சட்டமன்ற நாயகர் - கலைஞர்" நூற்றாண்டு விழா சிறப்பு மலரை வெளியிட, நீர்வளத்துறை அமைச்சரும், அவை முன்னவருமான துரைமுருகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல் இந்திய அரசியலின் திசையை தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞரின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத்திட்டங்களையும், சமுதாயத்தில் அதன் தாக்கத்தையும் வருங்காலங்களில் தமிழ்நாட்டு மக்கள் என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் தமிழ்நாடு அரசால் சிறப்பாக கொண்டாட முடிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 22.05.2023 அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தைத் தொடர்ந்து, அமைச்சர்கள் மற்றும் பேரவைத் தலைவர் தலைமையில் 12 சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இச்சிறப்பு குழுக்களில், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்ட "சட்டமன்ற நாயகர்-கலைஞர்" குழுவால், "நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது" என்ற தலைப்பில் சென்னையில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. மேலும், தமிழ்நாடு முழுவதும் 120 கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் துணைக் குழுக்கள் மூலம் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இக்கருத்தரங்குகளில் சுமார் 600 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். தொடர்ந்து கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான மாநில அளவிலான கருத்தரங்கு சென்னை, மாநிலக் கல்லூரியில் 27.2.2024 அன்று நடைபெற்றது. அதில் 54 மாணவ, மாணவியர்கள் பங்கேற்று தங்களது கருத்துகளை எடுத்துரைத்தனர்.

மேலும், சென்னை, ரோசரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான மாநில அளவிலான கருத்தரங்கு 29.8.2024 அன்று நடைபெற்றது. அதில், 53 மாணவ, மாணவியர்கள் பங்கேற்று தங்களது கருத்துகளை எடுத்துரைத்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவின் நிறைவாக, சட்டப்பேரவைத் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவால் தயாரிக்கப்பட்ட "சட்டமன்ற நாயகர் - கலைஞர்" நூற்றாண்டு விழா சிறப்பு மலரை முதல்வர் அவர்கள் வெளியிட, நீர்வளத்துறை அமைச்சரும், சட்டமன்றப் பேரவை முன்னவருமான துரைமுருகன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இந்த சிறப்பு மலரில் சட்டமன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய முக்கிய உரைகள், சட்டமன்ற மேலவையில் ஆற்றிய முக்கிய உரைகள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது முன்மொழிந்து நிறைவேற்றப்பட்ட முக்கிய அரசினர் தனித் தீர்மானங்கள், சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா முக்கிய உரைகள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிறப்பினை போற்றிடும் தலைவர்கள், முன்னாள் இந்நாள் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், ஆன்மீகத் தலைவர்கள் போன்றவர்களின் வாழ்த்துச் செய்திகள், கட்டுரைகள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

அதனைத் தொடர்ந்து, "நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது" என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கருத்தரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் குறித்து சிறப்பான கருத்துகளை எடுத்துரைத்ததற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட திருநெல்வேலியைச் சேர்ந்த எஸ்.ரகுமாள் (முதலிடம்), திருப்பத்தூரைச் சேர்ந்த மா. மகேஷ் (இரண்டாமிடம்) மற்றும் சென்னைச் சேர்ந்த நா.அழகேசன் (மூன்றாமிடம்) ஆகிய மூன்று கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இ.முகம்மது ஹாரிஸ் (முதலிடம்), விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கே.கவிலன் (இரண்டாமிடம்) மற்றும் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பா.வர்ஷா (மூன்றாமிடம்) ஆகிய மூன்று பள்ளி மாணவ, மாணவியர்கள் ஆகியோருக்கு முதல் பரிசாக 1 இலட்சம் ரூபாய், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய் ஆகிய பரிசுத் தொகைக்கான வங்கி வரைவோலைகளையும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர் கல்வித் துறை அமைச்சரும், விழாக் குழு இணைத் தலைவருமான முனைவர் கோவி.செழியன், சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, விழாக் குழு உறுப்பினர்கள், பேரவை முன்னாள் தலைவர் ஆர்.ஆவுடையப்பன், மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் மற்றும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி.ஞானசேகரன், பேரவை முன்னாள் செயலாளர் மா.செல்வராஜ், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை நிலை நாட்டிட - இந்த

# மனித உரிமை நாளில் உறுதி ஏற்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, டிச. 10-**

**அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிட - இந்த மனித உரிமை நாளில் அனைவரும் உறுதி ஏற்போம் என்று 'உலக மனித உரிமைகள்' நாளையொட்டி, வெளியிட்டுள்ள செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உலக மனித உரிமைகள் நாள் செய்தி வருமாறு:–

"மனித உரிமைகள் என்ற உள்ளார்ந்த அடிப்படைக் கொள்கை உலகம் முழுவதும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். உலகில் படைக்கப்பட்ட மனிதர்கள் அனைவரும் சமம் என்ற அடிப்படையிலும், மதிப்பு மற்றும் உரிமைகள் அனைவருக்கும் அளிக்கப்படவேண்டும் என்பதை கருத்தில் கொண்டும், அனைவரும் சகோதர மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும் என்ற நோக்கிலும் "சர்வதேச மனித உரிமைகள் நாள்" ஆண்டுதோறும் டிசம்பர் 10 அன்று கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

1948–ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (United Nations General Assembly) மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது; மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் பல நாடுகள் அடைந்த முன்னேற்றத்தினால்தான், மக்கள் சுதந்திரத்தை முழு அளவில் அனுபவிப்பதைத் தடுக்கும் தடைகள் அகற்றப்பட்டுள்ளன; பல நாடுகளில் இனவெறிச் சட்டங்கள் அகற்றப்பட்டுவிட்டன; பெண்களை இரண்டாம் தர நிலைக்குத் தள்ளும் சட்டங்கள் மற்றும் சமூக நடைமுறைகள் ஒழிக்கப்பட்டுவிட்டன; சிறுபான்மையினர் தங்கள் மத நம்பிக்கையை எந்தவித அச்சஉணர்வுமின்றி கடைப்பிடிக்கவும் வழி ஏற்பட்டுள்ளது.

1948–ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டதில் இந்தியாவின் பங்கு மகத்தானது. அப்பிரகடனத்தின்படி, இந்தியாவில் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 28.09.1993 அன்று நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின், சட்டப்பிரிவு 3, 21–இன்படி, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் மனித உரிமை மீறல் நிகழ்வுகள் எங்கும் நிகழக்கூடாது எனும் எண்ணத்துடன் 17.04.1997 அன்று ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர் தலைமையில், "தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம் எனும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாணையம் மனித உரிமைகளுக்காக பல்வேறு நடவடிக்கைளை எடுத்து வருகிறது. சட்டம், மனித உரிமைகள், கல்வி, உளவியல் மற்றும் குற்றவியல் ஆகியவற்றைத் தொடரும் மாணவர்கள், அவர்களின் பாடத் திட்டத்தின் ஒரு பகுதியான உள்பயிற்சி தொடர்பாக இந்த ஆணையத்திற்கு வருகின்றனர். இந்த மாணவர்கள், மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் இந்த ஆணையத்தின் செயல்பாட்டைப் பற்றிய தகவல்களை பரப்புவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இந்த ஆண்டிற்கான மனித உரிமைகள் நாள் கருப்பொருளாக (Theme) ஐக்கிய நாடுகள் சபையானது "நமது உரிமை, நமது எதிர்காலம் இப்போது (Our Rights, Our Future Right now) என்பதை அறிவித்துள்ளது. "எல்லோர்க்கும் எல்லாம்" என்ற அடிப்படையில், அனைத்துத் தரப்பினருக்குமான உன்னதமான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வரும் எங்களது திராவிட மாடல் அரசு, மதம், இனம், மொழி, நிறம், அரசியல் பாகுபாடின்றி அனைத்து உரிமைகளும் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்திடுவதிலும் அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு வருகிறது. அந்த வகையில், அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிட, சுயமரியாதையைப் பாதுகாத்திட இந்த மனித உரிமைகள் நாளில் நாம் அனைவரும் உறுதி ஏற்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.